ஆகஸ்ட் 2 அன்று – சென்னை செயின் பீட்ஸ் மேனிலைப்பள்ளி வளாகத்தில் – இந்தியாவிற்கே முன்னோடியாக

'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

விழா நடைபெறும் பள்ளி வளாகத்தை கள ஆய்வு செய்து – மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், விரைவில் "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் சென்னை மயிலாப்பூர் செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளிவளாகத்ததில் தொடங்கி வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் , நேற்று (27.07.2025) இப்பள்ளி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு கள ஆய்வு செய்து அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தேசிய நல்வாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் (பொ) மரு.தேரணிராஜன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை கூடுதல் இயக்குநர் மரு.சம்பத் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை, ஜூலை 28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" வருகின்ற 02.08.2025 அன்று காலை 10 மணிக்கு, சென்னை, மயிலாப்பூர் செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் தொடங்கி வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன் நேற்று (27.07.2025) இப்பள்ளி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு களஆய்வு செய்து அலு வலர்களுக்கு ஆலோ சனை களை வழங்கினார்.

பின்பு அமைச்சர் மா.சுப் பிரமணியன் செய்தியாளர்க ளிடம் தெரிவித்ததாவது:-

"நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்"

மக்கள் நல்வாழ்வுத் துறையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு பல்வேறு புதிய சிறப்புத் திட்டங்கள் தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம், இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் என்று மிகப்பெரிய அளவிலான சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மிகச் சிறந்த திட்டம் ஒன்று 02.08.2025 அன்று செயல்பாட்டுக்கு வரவிருக்கிறது. இந்தத் திட்டத்தின் பெயர் "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" ஆகும்.

தொடங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ள அனைத்து திட்டங்களும் நலம் காக்கும் திட்டங்களாக இருந்தாலும் கூட இந்தத் திட்டம் என்பது மக்களை மிகப்பெரிய அளவில் கவரும் என்கின்ற வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுவாகவே மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் உடல் நலனை பாதுகாத்திடும் வகையில் மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை அவ்வப்போது பரிசோதித்து வருகின்றனர். ஏற்கனவே மக்களைத் தேடி மருத்துவம் என்னும் திட்டத்தில் தொற்றா நோய்களுக்கான மருந்துகள் வழங்கப்படுவதன் மூலம் உலக அளவில் தமிழ்நாடு கவனத்தை ஈர்த்திருக்கிறது. குறிப்பாக ஐ.நா. சபையின் விருதும் கூட தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. United Nation Interagency Task Force Award 2024 என்கின்ற விருது மக்களை தேடி மருத்துவம் என்னும் திட்டத்திற்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இன்னுமொரு கூடுதல் செய்தி, இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 எனும் திட்டம் இன்றைக்கு இந்தியாவிற்கு வழிகாட்டியாக மாறி இருக்கிறது. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டத்தை முன்னோடியாக கொண்டு ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இப்படி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் திட்டங்களாக "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டம் மக்களைத் தேடி முழு உடல் பரிசோதனைத் திட்டம் என்கின்ற வகையில் செயல்படுத்தப்பட உள்ளது.

முழு உடற் பரிசோதனை செய்துகொள்வது என்பது தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் ரூ.15,000/ வரை செலவாகும். அரசு மருத்துவமனைகளில் கூட ரூ.4,000/ வரை செலவாகும். முழு உடற் பரிசோதனை என்பது இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களை தேடிச் சென்று முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளும் இந்த மகத்தான திட்டத்திற்கு 'நலம் காக்கும் ஸ்டாலின்' எனும் பெயரினை வைத்து இந்தத் திட்டத்தை வருகின்ற 02.08.2025 அன்று இந்த இடத்தில் திறந்து வைக்க உள்ளார்கள்.

இந்த திட்டத்தைப் பொறுத்தவரை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல், மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதவியல், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மன நல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெறவிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகள் சான்று

இவைகள் மட்டுமல்லாமல் கூடுதல் சிறப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களுக்கான மாற்றுத்திறன் சக்தியை கண்டறிந்து சான்றிதழ் பெறுவது என்பது அவசியமான ஒன்றாகும். ஏற்கனவே மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் ஒரு அலுவலகம் இருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் அந்த ஒரு இடத்திற்கு வந்து அவர்களுடைய மாற்றுத்திறன் சக்தியை கணக்கிட்டு சான்றிதழ் பெற வேண்டும். அந்தச் சான்றிதழ் பெறப்பட்ட பிறகு தான் அரசின் நலத்திட்டங்கள் அவர்களுக்கு சென்றடையும். இந்தத் திட்டத்தை எளிமைப்படுத்திடும் வகையில் தற்போது தொடங்கப்படவிருக்கும் 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்கின்ற இந்த முகாம்களில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இங்கேயே பரிசோதிக்கப்படுகிறார்கள். இந்த முகாம்களில் மருத்துவர்கள் இருப்பார்கள். எத்தனை சதவீதம் அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை கண்டறிந்து அங்கேயே அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

அதேபோல் காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 1.5 கோடி குடும்பங்கள் அதன் மூலம் தமிழ்நாட்டில் பயன்பெற்று வருகிறார்கள். இருந்தாலும் அந்தத் திட்டத்தில் புதிய பயனாளர்களை சென்றடையும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகத்தில் ஏற்பாடுகள் இருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு சைதாப்பேட்டை, ஆயிரம் விளக்கு போன்ற ஆகிய இரண்டு இடங்களிலும் காப்பீடு திட்டத்திற்கு இணைவதற்குரிய அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது, என்றாலும் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ள நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டத்தின் மூலம் நடைபெறும் முகாம்களில் புதிய காப்பீடு திட்டத்திற்கு இணைவதற்குரிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

புற்றுநோய் பாதிப்பு கண்டறியும் முகாம்

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு உலகிலேயே அச்சுறுத்தி வரும் பெரிய நோய் பாதிப்பு புற்றுநோய் பாதிப்பு ஆகும். எனவே புற்றுநோய் பாதிப்புகளை இங்கேயே கண்டறிந்து, கருப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்று நோய் என்று பல்வேறு வகைகளிலான ஆண், பெண் என்று இரு பாலருக்குமான புற்று நோய் பாதிப்புகளைக் கண்டறிகின்ற பணிகளும் இந்த முகாம்களில் நடத்தப்படவிருக்கிறது. இப்படி பல்வேறு சிறப்புகளை அடங்கிய இந்த முகாம்களைப் பொறுத்த வரை தமிழ்நாட்டில் 388 ஒன்றியங்களில், அதாவது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 என்கின்ற வகையில் 1,164 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

சென்னை மாநகராட்சியில் 15 இடங்களில் இந்த முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. சென்னைக்கு அடுத்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 வீதம் 20 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 வீதம் 57 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. ஆக மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்படும்.

ஓராண்டு காலத்திற்கு பொதுமக்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இந்த முகாம்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கோப்புகள் அவர்களிடத்திலேயே வழங்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் எதிர்காலத்தில் மேல் சிகிச்சை செய்து கொள்ளும் வகையில் இந்த ஆவணங்கள் அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் பயன் பெறும்.

இந்த முகாம் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் மட்டுமே நடைபெறும். காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 4 மணி வரை நடைபெறும். பெருநகர சென்னை மாநகராட்சி பொருத்தவரை இந்த முகாம் நடைபெறுவதற்கு முன்பாகவே பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் தெரிவிக்கப்படும். இந்த முகாம்களில் பொதுமக்களுக்கு இலவசமாக முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தேசிய நல்வாழ்வுக் குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர்(பொ) மரு. தேரணிராஜன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை கூடுதல் இயக்குநர் மரு.சம்பத் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி தேர்வாய், சிறுவாடா, கண்ணன்கோட்டை மற்றும் கரடிபுத்தூர் ஆகிய ஊராட்சியில் மக்களின் குறைகளை தீர்த்து வைக்கும் "உங்களுடன் ஸ்டாலின் முகாமை" டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து. திட்ட முகாமில் துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். உடன் மு.மணிபாலன் எம். முனிவேல், கே. ஆறுமுகம், இளங்கோ, பொன்னுசாமி, அசோக், கோபால், கே.வி.நாகராஜ், கஜேந்திரன், லால், சுப்பிரமணி, முத்துகிருஷணன், சிவா, முரளி, சுரேஷ், யுவராஜ், அமுல்ராஜ், செந்தில் கொண்டனர். உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் & கூடுவாஞ்சேரி நகராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகர மன்றத் தலைவர் எம்.கே.டி.கார்த்திக், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 158வது நாள்!

எழும்பூர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூலை 28 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 158 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (27.7.2025) எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 58, நேவல் மருத்துவமனை சாலை. 2) வட்டம் 58 அ,சூளை மெயின் ரோடு, ராம விலாஸ் ஹோட்டல் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்

நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதிஎத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன்,

இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்

புதிய வகை காகிதம் அறிமுகம்! வாடிக்கையாளர் சந்திப்புக் கூட்டம்!

சென்னை, ஜூலை 28 - தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆசியாவில் காகித தயாரிப்பில் ஒரு முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளில் பல புதுமைகளை பயன்படுத்தி பல்வேறு வகையான காகிதங்களை தயாரித்து வருகிறது. இந்நிலையில், டிஎன்பிஎல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சாக்சேனா, கூடுதல் தலைமை செயலாளர் , மேம்படுத்தப்பட்ட டிஎன்பிஎல் காப்பியர் காகிதத்தை 21.07.2025 (திங்கட்கிழமை) அன்று திருச்சியில் வெளியிட்டார். பின்னர் காகிதத் தயாரிப்பில் ஒரு புதிய மயில்கல்லாக அச்சு மற்றும் எழுதுவதற்கான 'VIVID PRINT' (56 GSM) எனும் புதிய வகை காகிதம் 22.07.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று சிவகாசியில் நடந்த நிகழ்வில் வெளியிடப்பட்டது. மதுரையிலும் 23.07.2025 (புதன்கிழமை) அன்று புதிய காகித வகைகளை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, சென்னை, ஹப்லிஸ் ஹோட்டலில், நடைபெற்ற வாடிக்கையாளர்கள் சந்திப்புக் கூட்டம் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் முனைவர் சந்தீப் சக்சேனா, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கூடுதல் தலைமை செயலாளர் ஆற்றிய சிறப்புரை வருமாறு:-

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் டிஎன்பிஎல், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, காகிதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து வகையான தயாரிப்புகளையும் உற்பத்தி செய்து வரும் தனித்துவமான அரசு நிறுவனமாகும். ஒருகாலத்தில், இந்தியாவில் இருந்த பல காகித நிறுவனங்கள் தற்போது செயல்பாட்டில் இல்லை. ஆனால், டிஎன்பிஎல் மட்டும் என்றும் ஒளிரும் நட்சத்திரமாக திகழ்கிறது.

இன்று, 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு டிஎன்பிஎல் காகிதங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பது மிகுந்த பெருமை அளிக்கிறது. அதற்குக் காரணம் டிஎன்பிஎல்லின் உலகதரம். ஆனால், நாளைய சந்தையின் தேவை மாறலாம். அதை உணர நாங்கள் வாடிக்கையாளர்களுடன் நேரடி தொடர்பை வலுப்படுத்த விரும்புகிறோம். வாடிக்கையாளர்களே எங்கள் வியாபாரத்தில் முக்கிய பங்காளிகள். உங்கள் கருத்துகள், குறைகள் மற்றும் ஆலோசனைகள் எங்களுக்கு மிக முக்கியம். அவைதான் எங்களை முன்னேற்றும் சக்தி. எங்கள் தயாரிப்புகள், சந்தைத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் முழுமையான நோக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் டிஎன்பிஎல்என் செயல் இயக்குநர் (இயக்கம்), முதன்மை பொது மேலாளர்கள், பொது மேலாளர்கள். அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள். வாடிக்கையாளர்கள். அச்சு உரிமையாளர்கள் மற்றும் அனைத்து பிரிவினரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆசியாவில் காகித தயாரிப்பில் ஒரு முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளில் பல புதுமைகளை பயன்படுத்தி பல்வேறு வகையான காகிதங்களை தயாரித்து வருகிறது. இந்நிலையில், டிஎன்பிஎல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சாக்சேனா. கூடுதல் தலைமை செயலாளர், மேம்படுத்தப்பட்ட டிஎன்பிஎல் காப்பியர் காகிதத்தை 21.07.2025 (திங்கட்கிழமை) அன்று திருச்சியில் வெளியிட்டார்.

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்-5, வார்டு-64, அபிராமி மஹாலில் 24.07.2025 அன்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மேயர்.க.வசந்தகுமாரி, மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர் கலந்து கொண்டு,பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு முறையாக பதிவு செய்யப்படுவதைப் பார்வையிட்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், துணை மேயர்.கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர் எஸ்.இந்திரன்,மாமன்ற உறுப்பினர் ஷகிலா ஜான்சிமேரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.